Malabar Regional Co-operative Milk Producers' Union Ltd.

milma

H O, Peringolam, Kunnamangalam, Kozhikode 673571, Kerala
Ph:0495 2805430/435, 9496839729. Web: www.malabarmilma.com
E-mail: production@malabarmilma.coop

MRU/PRDN/Products/2024-25 11.02.2025

E-TENDERS ARE INVITED

1. For the supply of Heat Shrink PVC Sleeves for Kattimoru and Milk PET bottles. (Tender ID:2025_KCMMF_736853_1)
2. For the Manufacturing, Packing and Supply of Instant Butter Idiyappam and Instant Ghee Upma to MRCMPU Ltd. (Tender ID: 2025_KCMMF_735944_1)

Last Date of submission: **28.02.2025**

For more details, visit **www.malabarmilma.com, www.etenders.kerala.gov.in**

(sd/-) Managing Director

INDIAN INSTITUTE OF TECHNOLOGY INDORE

NOTICE INVITING TENDER

Online tenders are invited on behalf of the, IIT Indore for the following items:

Sl. No	Description	Last Date of Submission of Bid
1.	Supply and installation of LCHRMS (Liquid Chromatography – High Resolution Mass Spectrometry	18.02.2025 (Upto 03:00 PM)
2.	Supply, Installation & Commissioning of High-field and Ultra Low-temperature Cryostat based Physical Properties Measurement System.	27.02.2025 (Upto 03:00 PM)
3.	Procurement of High Resolution Transmission Electron Microscope (HRTEM)	17.02.2025 (Upto 03:00 PM)
4.	Procurement of TEM Sample Preparation Equipments	17.02.2025 (Upto 03:00 PM)
5.	Procurement of Carbon Coater	17.02.2025 (Upto 03:00 PM)
6.	Dining & Catering Services at IIT Indore	03.03.2025 (Upto 03:00 PM)

Prospective bidders are also requested to visit the institute's website **http://mms.iiti.ac.in/main/mms_tenders** regularly for the latest updates on the above tenders.

REGISTRAR

Bharat Sanchar Nigam Limited

(A Government of India Enterprise)
CIN No. U74899DL2000GOI107739
Regd. & Corporate Office: Bharat Sanchar Bhawan, H. C. Mathur Lane, Janpath, New Delhi-1
Website: www.bsnl.co.in

NOTICE

Pursuant to Regulation 62(2) read with regulation 50(1) of the SEBI (Listing Obligation and Disclosure Requirement) Regulations, 2015, Notice is hereby given that a meeting of the Board of Directors of the Company is scheduled to be held on Friday, the 14th day of February, 2025 at the registered office of the Company situated at Bharat Sanchar Bhawan, HCM Lane, Janpath, New Delhi-110001, inter-alia to consider, approve and take on record, the financial results of the company for the quarter ended on 31st December 2024.

The details of the said meeting are also available on the website of the Company **www.bsnl.co.in** and on the website of the stock exchange **www.bseindia.com**.

For and on behalf of
BHARAT SANCHAR NIGAM LIMITED
Sd/-
(J.P. Chowdhary)
Company Secretary & GM (L)

Place: New Delhi
Date: 3rd February, 2025

Schneider Electric Infrastructure Limited

Registered Office: Milestone 87, Vadodara-Halol Highway, Village Kotambi, Post office Jarod, Vadodara - 391510, Gujarat, India
Corporate Office: 9th Floor, DLF Building No. 10 Tower C, DLF Cyber City Phase II, Gurugram -122002, Haryana, India,
Tel : +91 124 3940400; Fax : +91 124 4222036;
Website: https://infra-in.se.com/, CIN : L31900GJ2011PLC064420

STATEMENT OF UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED ON DECEMBER 31, 2024

The Financial Results were reviewed by Audit Committee and approved by the Board of Directors at their meeting held on February 11, 2025.

The Results along with Limited Review Report have been posted on the Company's Website at: https://infra-in.se.com/en/investor/annual-reports-financials.jsp and can be accessed by scanning the QR Code.

By Order of the Board,
For **Schneider Electric Infrastructure Limited**
Sd/-
Udai Singh
Managing Director & CEO
DIN : 10311583

Place : Gurugram
Date : February 11, 2025

Kirloskar Oil Engines

Scan this QR code for full standalone and consolidated financial results for the quarter and nine months ending 31st December 2024

EXTRACT OF STANDALONE AND CONSOLIDATED UNAUDITED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDING 31ST DECEMBER 2024

(₹ in Crores)

Sr. No.	Particulars	Standalone			Consolidated		
		Quarter Ending		Nine Months Ending	Quarter Ending		Nine Months Ending
		31-12-2024	31-12-2023	31-12-2024	31-12-2024	31-12-2023	31-12-2024
		Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited
1	Total Income from Operations	1,163.60	1,135.19	3,700.86	1,453.70	1,391.30	4,596.24
2	Net Profit / (Loss) for the period (before tax and Exceptional items)	88.67	110.90	417.17	94.63	152.47	457.09
3	Net Profit / (Loss) for the period before tax (after Exceptional items)	88.67	110.90	417.17	94.63	121.58	472.38
4	Net Profit / (Loss) for the period after tax (after Exceptional items)	65.03	82.19	310.80	67.89	89.39	349.26
5	Total Comprehensive Income for the period [Comprising Profit/ (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	64.00	81.61	308.20	66.81	88.76	346.27
6	Paid-up equity share capital (Face value of ₹ 2 each)	29.03	28.98	29.03	29.03	28.98	29.03
7	Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year *	-	-	-	-	-	-
8	Basic EPS (₹) (Face value of ₹ 2 each) [not annualized]	4.48	5.67	21.42	4.91	6.20	24.69
9	Diluted EPS (₹) (Face value of ₹ 2 each) [not annualized]	4.47	5.65	21.37	4.89	6.18	24.57

(*) Reserves excluding revaluation reserve of the previous year ended 31st March 2024 as per Standalone balance sheet is Rs. 2,593.70 Crores and that as per Consolidated balance sheet is Rs. 2,647.22 Crores

Notes:

1 The above is an extract of the detailed format of standalone and consolidated financial results for the quarter and nine months ending 31st December 2024 filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 including amendments thereunder. The full format of the standalone and consolidated financial results for the quarter and nine months ending 31st December 2024 are available on the Stock Exchange websites (www.bseindia.com and www.nseindia.com) and on the Company's website (www.kirloskaroilengines.com).

2 The above extract of standalone and consolidated financial results for the quarter and nine months ending 31st December 2024 are reviewed and recommended by the Audit Committee and approved by the Board of Directors of the Company in their respective meetings held on 11th February 2025 and are subjected to a "Limited Review" by the Statutory Auditors of the Company.

3 The Board of Directors in its meeting held on 11th February 2025 has declared an interim dividend of Rs. 2.50/- (125%) per equity share of Rs. 2/- each for the year ended 31st March 2025. The record date for payment of interim dividend is 21st February 2025.

Kirloskar Oil Engines Limited
A Kirloskar Group Company
Registered Office: Laxmanrao Kirloskar Road, Khadki, Pune - 411 003
CIN: L29100PN2009PLC133351

Place : Pune
Date : 11th February 2025

Tel: +91 20 2581 0341
Fax: +91 20 2581 3208, 2581 0209

Email: investors@kirloskar.com
Website: www.kirloskaroilengines.com

"Mark bearing word 'Kirloskar' in any form as a suffix or prefix is owned by Kirloskar Proprietary Ltd. and Kirloskar Oil Engines Ltd. is the Permitted User"

For Kirloskar Oil Engines Limited
Sd/-
Gauri Kirloskar
Managing Director
DIN: 03366274

DALMIA BHARAT SUGAR AND INDUSTRIES LIMITED

Regd. Office : Dalmiapuram - 621 651, Distt. Tiruchirapalli (Tamil Nadu)
Phone : 011 23465100, Fax (011) 23313303
Email : sec.corp@dalmiasugar.com . Website : www.dalmiasugar.com . CIN : L15100TN1951PLC000640

Extract of unaudited Consolidated Financial Results for the quarter and period ended 31-12-2024

(₹ in Crore except earning per share data)

S.No.	Particulars	For the quarter ended			For the period ended		For the year ended
		31-12-2024	30-09-2024	31-12-2023	31-12-2024	31-12-2023	31-03-2024
		Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Audited
1	Total Income from Operations	**864.01**	942.37	610.12	**2782.21**	2240.74	3027.98
2	Net Profit/ (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items.)	**75.86**	37.89	95.65	**188.77**	256.88	363.41
3	Net Profit/ (Loss) for the period before Tax (After Exceptional and/or Extraordinary items.)	**75.86**	37.89	95.65	**188.77**	256.88	363.41
4	Net Profit/ (Loss) for the period after Tax (After Exceptional and/or Extraordinary items.)	**59.51**	66.18	64.92	**180.44**	181.16	272.47
5	Total Comprehensive Income for the period [comprising profit/(Loss) for the period (after tax) and other comprehensive income (after tax)]	**13.56**	94.74	27.34	**126.84**	267.14	265.66
6	Equity Share Capital	**16.19**	16.19	16.19	**16.19**	16.19	16.19
7	Earning per Share (face value of ₹ 2 each)						
a)	Basic	**7.35**	8.18	8.02	**22.29**	22.38	33.66
b)	Diluted	**7.35**	8.18	8.02	**22.29**	22.38	33.66

Standalone Financial Results

1	Total Income from Operations	**866.80**	942.48	607.28	**2776.22**	**2237.90**	**3006.08**
2	Net Profit/ (Loss) for the period before Tax	**86.69**	45.42	92.84	**214.12**	**254.06**	**362.66**
3	Net Profit/ (Loss) for the period after Tax	**70.33**	73.71	62.11	**205.79**	**176.34**	**271.72**

Notes :-

1 The financial results are approved by the Board of Directors at their meeting held on February 11, 2025 after being reviewed and recommended by the audit committee. The statutory auditors have carried limited review of these financials.

2 The above is the extract of the detailed format of quarterly/nine monthly financial results filed with the stock exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the financial results is available on the Stock Exchange websites, www.nseindia.com, www.bseindia.com and on the company website www.dalmiasugar.com.

For Dalmia Bharat Sugar and Industries Limited

Pankaj Rastogi
Whole Time Director & CEO

Place: New Delhi
Date: Feb 11, 2025

Shristi Infrastructure Development Corporation Limited

SHRISTI
WELCOME TO LIFE

Regd. Office : Plot No. X - 1, 2 & 3, Block-EP, Sector V, Salt Lake City, Kolkata-700 091
CIN - L65922WB1990PLC049541
Phone No. : (033) 4020 2020 / 4015 4646
E-mail : investor.relations@shristicorp.com, Website : www.shristicorp.com

EXTRACT OF UNAUDITED STANDALONE AND CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND NINE MONTHS ENDED 31ST DECEMBER, 2024

(₹ in Lakhs)

Sl. No.	Particulars	STANDALONE						CONSOLIDATED					
		Quarter Ended			9 Months Ended		Year Ended	Quarter Ended			9 Months Ended		Year Ended
		31.12.2024	30.09.2024	31.12.2023	31.12.2024	31.12.2023	31.03.2024	31.12.2024	30.09.2024	31.12.2023	31.12.2024	31.12.2023	31.03.2024
		Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Audited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Unaudited	Audited
1	Total Income from operations	1,872.16	1,415.97	2,065.11	4,577.20	5,235.17	10,125.80	1,872.16	1,415.97	6,094.80	4,577.20	14,674.55	11,538.58
2	Net Profit / (Loss) for the period (before Tax and Exceptional item)	(927.56)	(292.70)	(1,179.20)	(1,634.00)	(3,460.38)	(5,139.07)	(927.76)	(292.84)	(1,185.42)	(1,634.59)	(3,845.03)	(5,163.71)
3	Net Profit / (Loss) for the period before Tax (after Exceptional item)	(927.56)	(292.70)	(1,179.20)	(1,634.00)	(3,460.38)	(1,428.94)	(927.76)	(292.84)	(1,185.42)	(1,634.59)	(3,845.03)	(1,453.58)
4	Net Profit / (Loss) for the period after Tax (after Exceptional item)	(913.27)	(342.32)	(1,395.65)	(1,702.43)	(3,787.74)	(1,839.53)	(913.47)	(342.46)	(1,405.61)	(1,703.02)	(4,181.55)	(1,867.87)
5	Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)]	(910.01)	(339.07)	(1,395.92)	(1,692.67)	(3,788.55)	(1,826.51)	(66.73)	(988.48)	(1,907.60)	(1,888.20)	(5,621.90)	(4,007.52)
6	Paid up Equity Share Capital (Face value Rs. 10/-)	2,220.00	2,220.00	2,220.00	2,220.00	2,220.00	2,220.00	2,220.00	2,220.00	2,220.00	2,220.00	2,220.00	2,220.00
7	Reserves (excluding Revaluation Reserves as shown in the Audited Balance Sheet)	(8,579.65)	(7,669.64)	(8,849.03)	(8,579.65)	(8,849.03)	(6,886.99)	(15,566.93)	(14,998.50)	(28,745.26)	(15,566.93)	(28,745.26)	(13,166.36)
8	Net Worth	(6,359.65)	(5,449.64)	(6,629.03)	(6,359.65)	(6,629.03)	(4,666.99)	(13,346.93)	(12,778.50)	(26,525.26)	(13,346.93)	(26,525.26)	(10,946.36)
9	Paid up Debt Capital/ Outstanding Debt	39,205.85	39,718.31	45,916.63	39,205.85	45,916.63	40,736.11	39,833.90	40,346.37	102,792.35	39,833.90	102,792.35	41,358.64
10	Debt Equity Ratio	(6.16)	(7.29)	(6.93)	(6.16)	(6.93)	(8.73)	(2.98)	(3.16)	(3.88)	(2.98)	(3.88)	(3.78)
11	Earning per Share (of Rs 10/- each)												
	(i) Basic (Rs.)	(4.11)	(1.54)	(6.29)	(7.67)	(6.29)	(8.29)	(0.32)	(4.47)	(8.59)	(8.55)	(25.32)	(18.10)
	(ii) Diluted (Rs.)	(4.11)	(1.54)	(6.29)	(7.67)	(6.29)	(8.29)	(0.32)	(4.47)	(8.59)	(8.55)	(25.32)	(18.10)
12	Debenture Redemption Reserve	3,121.54	3,020.85	2,718.76	3,121.54	2,718.76	2,819.46	3,121.54	3,020.85	2,718.76	3,121.54	2,718.76	2,819.46
13	Debt Service Coverage Ratio	(0.58)	0.29	(0.21)	(0.14)	(0.17)	0.14	(0.58)	0.29	0.12	(0.14)	0.07	0.14
14	Interest Service Coverage Ratio	(0.95)	0.43	(0.50)	(0.24)	(0.43)	0.50	(0.95)	0.43	0.28	(0.24)	0.18	0.49

Note: **1.** The above financial results have been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their meeting held on 11th February, 2025. **2.** The above is an extract of the detailed format of Quarterly Financial Results filed with the Stock Exchanges under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Quarterly Financial Results are available on the Stock Exchange website i.e BSE website (www.bseindia.com), Calcutta Stock Exchange Limited (www.cse-india.com) and Company's website (www.shristicorp.com).

For and on behalf of the Board of Directors
Shristi Infrastructure Development Corporation Limited
Sunil Jha
Managing Director

Place : Kolkata
Dated : 11th February, 2025

பெசன்ட் நகர் கடற்கரையை மாற்றுத் திறனாளிகள் ரசிக்க புதிய வசதி

துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைத்தார்

சென்னை, பிப். 11: சென்னை பெசன்ட் நகர் கடற்கரையை மாற்றுத் திறனாளிகள் அருகில் சென்று ரசிக்க ஏதுவாக அமைக்கப்பட்ட மரப்பால பாதையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் செவ்வாய்க்கிழமை (பிப்.11) திறந்து வைத்தார்.

சென்னை மாநகரம் முழுவதும் சிங்காரச் சென்னை 2.0 திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், மாற்றுத் திறனாளிகளும் சென்னை மெரினா கடற்கரையின் அழகை அருகில் சென்று ரசிக்கும் வகையில், மணல் பரப்பில் பிரத்யேக மரப்பாலம் அமைக்கப்பட்டது. இதனை மாற்றுத் திறனாளிகள் மட்டுமின்றி வயதானவர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், மெரீனாவுக்கு அடுத்தபடியாக சென்னைவாசிகளை பெரிதும் கவர்ந்த பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கென பிரத்யேக மரப்பால வசதி அமைக்கப்பட்டுள்ளது. சிங்காரச் சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.1.61 கோடி மதிப்பில் அமைக்கப்பட்ட மரப் பலகைகளால் ஆன பாதையை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், செவ்வாய்க்கிழமை திறந்து வைத்தார்.

சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் மாற்றுத்திறனாளிகளுக்காக அமைக்கப்பட்ட மரப்பால பாதையை (இடது) திறந்து வைத்து அவர்களை பிரத்யேக வண்டியில் அமரவைத்து கடல்அலைகளுக்கு அருகில் அழைத்துச் சென்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின். உடன் உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா.

அதன்பிறகு, செய்தியாளர்களுக்கு அவர் அளித்த பேட்டி: மெரீனாவில் கிடைத்த அனுபவம் பெசன்ட் நகர் கடற்கரைக்கு வரும் மாற்றுத் திறனாளிகளுக்கும் கிடைக்க வேண்டுமென கோரிக்கை வைக்கப்பட்டது. எனவே, பெசன்ட் நகர் கடற்கரையில் மரப்பலகை பாலம் அமைக்கும் பணி கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடங்கி வைக்கப்பட்டது.

திருவான்மியூர் கடற்கரையிலும்....: ஆறு மாதங்களில் பணிகள் நடந்து முடிந்துள்ளன. கடலுக்குச் செல்லும் வகையில் இந்தப் பாதை 190 மீட்டர் நீளமும், 2.8 மீட்டர் அகலமும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. பாதை மட்டுமன்றி, மாற்றுத் திறனாளிகள் தங்களது பிரத்யேக வாகனங்களை நிறுத்திக் கொள்ளவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து, திருவான்மியூர் கடற்கரையில் மாற்றுத் திறனாளிகளுக்கென பிரத்யேக மரப்பலகை பாதை அமைக்கப்படும். இந்தப் பணிகள் 5 மாதங்களில் நிறைவடையும். அதனையும் திறந்து வைப்போம்.

நாகப்பட்டினம் மாவட்டம் வேளாங்கண்ணி கடற்கரையிலும் இதேபோன்ற வசதி செய்து தரப்பட வேண்டுமென கோரப்பட்டுள்ளது. அதையும் பரிசீலிப்போம் என்று துணைமுதல்வர் உதயநிதி கூறினார்.

இந்த நிகழ்வில், அமைச்சர்கள் கே.என்.நேரு, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தண்டவாள பராமரிப்பு பணி: மின்சார ரயில் சேவை பாதிப்பு

சென்னை, பிப்.11: ரயில் தண்டவாள பராமரிப்பு பணிகாரணமாக அரக்கோணத்திலிருந்து சென்னை சென்ட்ரல் நோக்கி வந்த புறநகர் மின்சார ரயில்கள் செவ்வாய்க்கிழமை ஆங்காங்கே நிறுத்தப்பட்டன. இதனால் பயணிகள் கடும் அவதிக்குள்ளாகினர்.

வியாசர்பாடி ஜீவா ரயில்நிலையத்தில் தண்டவாள பராமரிப்பு பணிகள் செவ்வாய்க்கிழமை நடைபெற்றன. இதன்காரணமாக பகல் 12.15 மணிக்கு அரக்கோணத்திலிருந்து சென்ட்ரல் நோக்கி வந்த புறநகர் ரயில் வியாசர்பாடி ஜீவாவுடன் நிறுத்தப்பட்டது. மேலும் அவ்வழித்தடத்தில் வந்த 3-க்கும் மேற்பட்ட மின்சார ரயில்கள் அடுத்தடுத்த வரிசையாக நிறுத்திவைக்கப்பட்டன.

இதனால் பயணிகள் பலர் வியாசர்பாடி ஜீவா ரயில் நிலையத்தில் இறங்கி பேருந்து, ஆட்டோ போன்றவற்றின் மூலம் பயணிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

எனினும் சென்ட்ரலிலிருந்து அரக்கோணம், திருத்தணி மார்க்கத்தில் மின்சார ரயில்கள் எவ்வித தடையுமின்றி வழக்கம் போல் இயங்கின.

அதைத்தொடர்ந்து பிற்பகல் 1 மணிக்கு பராமரிப்பு பணிகள் நிறைவடைந்ததை அடுத்து அவ்வழித்தடத்தில் மின்சார புறநகர் ரயில்கள் மீண்டும் வழக்கம்போல் இயக்கப்பட்டன.

ஆர்ப்பாட்டம்...

டாஸ்மாக் பணியாளர்களுக்கு பணி நிரந்தரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, சென்னை எழும்பூரில் உள்ள டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் அலுவலகம் அருகே செவ்வாய்க்கிழமை நடைபெற்ற காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கி வைத்து உரையாற்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் இரா. முத்தரசன்.

இஸ்ரோவுடன் இணைந்து நவீன செமிகண்டக்டர் சிப் உருவாக்கி சென்னை ஐஐடி சாதனை

சென்னை, பிப்.11: சென்னை ஐஐடி, இஸ்ரோவுடன் இணைந்து ஆத்ம நிர்பார் பாரத் திட்டத்துக்கு வலுசேர்க்கும் வகையில் விண்வெளித் தரத்தில் செமிகண்டக்டர் (குறைமின் கடத்தி) சிப்-பை வெற்றிகரமாக உருவாக்கி சாதனை படைத்துள்ளது.

இது குறித்து சென்னை ஐஐடி வெளியிட்ட செய்திக் குறிப்பு: சென்னை ஐஐடி கணினி அறிவியல், பொறியியல் துறையின் பிரதாப் சுப்பிரமணியம் எண்ம நுண்ணறிவு - பாதுகாப்பான வன்பொருள் கட்டடக்கலை மையத்தில் ஐஐடி இயக்குநர் வி.காமகோடி தலைமையில் சக்தி மைக்ரோபிராசசர் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ் விண்வெளித் தரத்தில் செமிகண்டக்டர் உருவாக்கப்பட்டுள்ளது.

செமிகண்டக்டர் முயற்சியை நாட்டுக்கு முக்கியமானதாக மாற்றும் நடவடிக்கையின் பலனாக, இது முழுக்க முழுக்க இந்தியாவில் உருவாக்கப்பட்டது. ஆத்ம நிர்பார் பாரத் திட்டத்துக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகவும் இது திகழ்கிறது.

ஐஐஎஸ்யு என அழைக்கப்படும் திருவனந்தபுரத்தில் உள்ள இஸ்ரோவின் 'இன்னர்ஷியல் சிஸ்டம்ஸ் யூனிட்டில்' உருவாக்கப்பட்டு, சென்னை ஐஐடி மூலம் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது.



இஸ்ரோவுடன் இணைந்து சென்னை ஐஐடி உருவாக்கிய நவீன செமி கண்டக்டர் சிப்.

எஸ்சிஎல் என அழைக்கப்படும் சண்டிகரில் உள்ள செமிகண்டக்டர் ஆய்வகத்தில் தயாரிக்கப்பட்டு, கர்நாடகாவின் பெர்ஜெனஹள்ளியில் அமைந்துள்ள டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் மூலம் தொகுக்கப்பட்டது. குஜராத்தின் பிசிபி பவர் நிறுவனம் தயாரித்த மதர்போர்டு பிசிபி (பிரிண்டட் சர்க்யூட் போர்டு), சென்னையின் சிர்மா எஸ்ஜிஎஸ் நிறுவனத்தில் அசெம்பிள் செய்யப்பட்ட பின்னர், சென்னை ஐஐடியால் உருவாக்கப்பட்ட மென்பொருள் ஆகியவற்றுடன் சென்னை ஐஐடியில் வெற்றிகரமாக 'பூட்' செய்யப்பட்டது.

இது குறித்து சென்னை ஐஐடி இயக்குநர் காமகோடி கூறியதாவது: சிப் வடிவமைப்பு, சிப் உற்பத்தி, சிப் பேக்கேஜிங், மதர்போர்டுவடிவமைப்பு-உற்பத்தி, அசெம்பிளி, மென்பொருள், பூட் - அனைத்தும் உள்நாட்டிலேயே மேற்கொள்ளப்பட்டது. முழுமையான செமிகண்டக்டர் சுற்றுச்சூழல் அமைப்பு-நிபுணத்துவம் நம் நாட்டுக்குள்ளே இருப்பதை மீண்டும் உறுதிப்படுத்துவம் வகையில் இது அமைந்துள்ளது என்றார்.

இந்தக் கூட்டு முயற்சி குறித்து இஸ்ரோ தலைவர் வி. நாராயணன் கூறியதாவது: சென்னை ஐஐடியின் சக்தி பிராசசரை அடிப்படையாகக் கொண்ட ஐஐஎஸ்யூவால் உருவாக்கப்பட்ட ஐஆர்ஐஎஸ் கண்ட்ரோலரை இந்தியாவில் முழுமையாக வெற்றிகரமாக உருவாக்க முடிந்தது ஒரு மகிழ்ச்சியான தருணம். எங்கள் தேவைகளுக்கு ஏற்ப உருவாக்கப்பட்ட இந்த உயர் செயல்திறன் கண்ட்ரோலர், விண்வெளிப் பயணத்துக்கான எதிர்கால உட்பொதிக்கப்பட்ட கண்ட்ரோலர்களுக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என உறுதியாக நம்புகிறேன். இந்தக் கண்ட்ரோலரை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்பு ஒன்றை விரைவில் விண்வெளிப் பயணத்தில் சோதனை செய்யவும் திட்டமிட்டுள்ளோம். இதன் வாயிலாக இதன் செயல்திறன் மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றார்.

பொங்கலுக்கு தரமான வேட்டி-சேலைகள் விநியோகம்

அமைச்சர் ஆர்.காந்தி

சென்னை, பிப். 11: பொங்கல் பண்டிகையையொட்டி குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாயவிலைக் கடைகளின் வழியாக தரமான வேட்டி, சேலைகள் விநியோகம் செய்யப்பட்டதாக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்துள்ளார்.

பொங்கல் வேட்டி-சேலைகளின் தரம் குறித்து புகார் எழுந்த நிலையில், அவர் இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் ஆர்.காந்தி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

பொங்கல் பண்டிகையையொட்டி, 1.77 கோடி வேட்டிகளும், அதே அளவுக்கு சேலைகளையும் உற்பத்தி செய்ய உத்தரவு வெளியிடப்பட்டது. அரசின் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் இருந்து நூலும், சிட்டா நூல் தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்திடமிருந்தும் கொள்முதல் செய்யப்பட்டது. சாயமிட்ட பருத்தி நூலும் மற்றும் பாலியஸ்டர் ஊடை நூலானது தேசிய அளவிலான ஒப்பந்தப்புள்ளி வழியாக கொள்முதல் செய்யப்பட்டது.

சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படும் நூல் ரகங்கள், அரசு நூல் கிடங்குகளில் பெறப்பட்டு நூல் மாதிரிகள் எடுக்கப்பட்டன.

அவை அங்கீகரிக்கப்பட்ட மையங்களின் வழியே தரப்பரிசோதனை செய்யப்பட்டு தேர்வு பெற்ற நூல் மாதிரிகள் மட்டுமே, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பப்பட்டன. அந்த நூல்களைக் கொண்டு வேட்டி சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டன. தமிழ்நாடு அரசால் நிர்ணயிக்கப்பட்ட தர அளவீடுகளின் படி தரமான வேட்டி சேலைகள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்வது உறுதி செய்யப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

6 நாள்களுக்கு வறண்ட வானிலை

சென்னை, பிப்.11: தமிழகத்தில் அடுத்த 6 நாள்களுக்கு வறண்ட வானிலையே நீடிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்காலில் புதன்கிழமை (பிப்.12) முதல் பிப்.17 வறண்ட வானிலையே நிலவும்.

காலை நேரங்களில் லேசான பனி மூட்டம் இருக்கும்.

மேலும், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் காலை நேரங்களில் பனி மூட்டம் நிலவும் என்று வானிலை மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 மண்டலங்களில் பிப்.14,15 -இல் குடிநீர் விநியோகம் நிறுத்தம்

சென்னை, பிப்.11: சென்னையில் ராயபுரம், திரு.வி.க.நகர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட ஒரு சில பகுதிகளில் பிப்.14,15 -ஆகிய தேதிகளில் குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.

சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சென்னை புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் குடிநீர் பிரதான குழாய் இணைக்கும் பணிகள் பிப்.14 காலை 10 முதல் பிப்.15 காலை 10 மணி வரை நடைபெறவுள்ளன.

பணி நடைபெறும் நேரங்களில் ராயபுரத்தில் மண்டலத்தில் புரசைவாக்கம், பெரியமேடு, செளகார்பேட்டை, எழும்பூர் , சிந்தாதிரிபேட்டை ஆகிய பகுதிகளிலும், திரு.வி.க.நகர் மண்டலத்தில் ஓட்டேரி, அயனாவரம், பெரம்பூர், செம்பியம் ஆகிய பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.

அதேபோல் அண்ணா நகர் மண்டலத்தில் கீழ்ப்பாக்கம் மற்றும் வில்லிவாக்கத்திலும் தேனாம்பேட்டை மண்டலத்தில் சேப்பாக்கம், திருவல்லிக்கேணி பகுதிகளிலும் கோடம்பாக்கம் மண்டலத்தில் தியாகராய நகர், சைதாப்பேட்டை பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் நிறுத்தப்படவுள்ளது.

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

அவசர தேவைக்கு https://cmwssb.tn.gov.in என்னும் இணையதள முகவரியில் முன்பதிவு செய்து லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் எவ்வித தடையுமின்றி வழக்கம்போல் விநியோகம் செய்யப்படும்.